தொழிலதிபர்களே...
விவசாயிகளே...
உங்களுக்குத் தேவையான
புதிதாக
இறக்குமதி செய்யப்பட்ட
ஃ மின்சார மோட்டர்கள்
5 H. P, - 6 H. P, - 10H. P,
15 H. P மற்றும்
ஃ வில்லியர்ஸ் நீரிறைக்கும்
யந்திரங்கள்...
அனைத்துக்கும்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
யாழ்ப்பாணம் - போன் 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 ஆனி: 29 ஷஃபா: 6 இதழ்: 152
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13-7-78

எழுத்துலகின் நண்பன்
பாக்கர் ...
பைலட் ...
ஊற்றுப்பேனா,
போல்பென் றீபில்கள்...
பெருமளவில் இறக்குமதி
செய்யப்பட்டு விற்பனை செய்யப்படு
கின்றது. வர்ண நிறங்கள்.
விற்பனையில் முந்துங்கள்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
யாழ்ப்பாணம் - போன் 284

## துரையப்பா கொலைவழக்கு: எதிரிகள் நால்வர்

# விசாரணை நடுவில் விடுதலை

## கொலைக் குற்றச்சாட்டின்மீது கலாபதி தொடர்ந்து விசாரிக்கப்படுகிறார்

(நமது நிருபர்கள்: மாலி - யோகநாதன்)

[கொழும்பு]

**முன்னாள் யாழ். மாநகர மேயர் துரையப்பா கொலைவழக்கில் 2-ம் எதிரி வி. ஏ. கிருபாகரன், 3-ம் எதிரி எஸ். லோகநாதன், 4-ம் எதிரி வி. சிறிதரன், 5-ம் எதிரி ரி. சந்ததியார் ஆகிய நால்வரும் நேற்று விசாரணை நடுவில் விடுதலை செய்யப்பட்டனர்.**

கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் திரு. ஜே. எப். ஏ. சோஸா விஞல் தமிழ்பேசும் ஜூரர்களின் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எட்டாவது நாளாக விசாரிக்கப்பட்டது.

திரு. துரையப்பாவை கொலைசெய்ய சதிபுரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டிலிருந்து எதிரிகள் ஐவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனல் கொலைசெய்த குற்றச்சாட்டு மீது முதலாம் எதிரியான பா. கலாபதி மீது மாத்திரம் தொடர்ந்து விசாரணை நடைபெறுகின்றது. கொலைக்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டிலிருந்தும் நான்குபேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

துரையப்பா கொலை வழக்கு விசாரணைநடுவில் நேற்றுக்காலை 9-55மணிக்கு 2ம், 3ம், 4ம், 5ம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். 1ம் எதிரி மீது மட்டும் கொலைக்குற்றச்சாட்டுக்கு தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

இன்று வியாழக்கிழமை காலை பிரதம வழக்குதொடுநரான கௌத் செனவிரத்தின தொகுப்புரை நிகழ்த்துவார். அதன்பின் 1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் தமிழில்தொகுப்புரை நிகழ்த்துவார்.

''என்னமொழியில் தொகுப்புரை நிகழ்த்தப்போகிறீர்கள்?'' என நீதிபதி கேட்டபோது, ''தமிழ்மொழியில்'' என சட்டத்தரணி சிவா கூறினர்.

நேற்று நீதிமன்றத்திற்கு வெளியிலும் பெருந்திரளானோர் கூடிநின்றனர். பெண்களும் அநேகர் வந்திருந்தனர்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சட்டத்தரணி வி. என். நவரத்தினம், வார்ட்டிலிருந்து துண்டு வெட்டி அவசரமாகக் கொழும்பு வந்து நேற்றுக் கோர்ட்டில் சமுகமளித்திருந்தார்.

### தாமோதரம்பிள்ளை சாட்சியம்

இன்ஸ்பெக்டர் தில்லையம்பலம்தாமோதரம்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது; செப்டம்பர் 75-ல் நான் யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன். 20-9-75 1-ம் எதிரியை வல்வெட்டித்துறையில் அவரது வீட்டில் கைது செய்தேன். 75 செப்டம்பர் 22-ம் திகதி நான் 2-ம் எதிரியை பொல்நறுவாயில் வைத்து கைது செய்தேன். இதுதொடர்பாக பொல்நறுவா சென்று அங்குள்ள மதுபான கடையையும் அருகிலுள்ள கடையையும் சோதனை செய்தேன். 2-ம் எதிரி வெறும் மேலுடனும் வேட்டியுடனும் ஓடிவிட்டார். பின் பொல்நறுவா பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தேன். இன்ஸ்பெக்டர் யோகரன் தலைமையில் வந்த கோஷ்டி அவரை கைது செய்து தந்தது.

சட்: சிவா: 1-ம் எதிரியை அவரது வீட்டில் கைதுசெய்தீர்?-ஆம்.

சட். சிவா: இரவில் கைது செய்தீர்?-ஆம்.

### சாட்சியம் இல்லை

பிரதம வழக்கு தொடுநர் செனவிரத்ன தமது பக்க சாட்சியங்களை முடித்து கொண்டுவிட்டதாக நீதிபதியிடம் கூறி

(6ம் பக்கம் பார்க்க)

## 'நீதிக்குக் கிடைத்த வெற்றி' என்றனர்

(கொழும்பு)

விடுதலை செய்யப்பட்ட எதிரிகள் நால்வரும் நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்ததும் உறவினர்களும் ஆதரவாளர்களுமாக பெருந்திரளானோர் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

பலர் கைலாகு கொடுத்து ஆரத்தழுவினர். எவ்வித சலனமுமற்ற அமைதியான புன்னகையுடன் காணப்பட்ட அவர்கள் தமக்களிக்கப்பட்ட தீர்ப்பு நீதிக்குக் கிடைத்த வெற்றி' என்றனர்.

'முதலாம் எதிரி மீதான தீர்ப்பு திங்கட்கிழமை அளிக்கப்பட்ட பின்னரே நாம் யர்ழ்ப்பாணம் செல்வோம்' என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள முதலாம் எதிரி கலாபதியைச் சூழ்ந்தும் நீதிமன்றத்தில் பலர் நின்றவண்ணமிருந்தனர். சிறைக்காவலர்கள் அவரை அழைத்துச் செல்லும் வரை சிரித்த முகத்தோடு அவர் காணப்பட்டார்.

முதலாம் எதிரி நீலக்கோடிட்ட வெள்ளை சேட்டும், அதற்கேற்ற மரூன் கலர்

(6ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்றைய தினம் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 670வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
**37 E 0362**
ரூபா 1,00,000

இரண்டாம் பரிசு
**50 J 0306**
ரூபா 40,000

மூன்றும் பரிசு
**37 R 0984**
ரூபா 10,000

100 ஆறுதல் பரிசுகள் தலா ரூபா 1,3 0-37 கொண்டவை நாளை வெளிவரும்.

ROBBIALAC
பெயின்ட் வகைகளுக்கு
RAMSONS
ஸ்டான்லி றேட் வாருங்கள்! குமாரைச் சந்தியுங்கள்!!
TEL: 508


## வரிவிளம்பரம்

### தேவை

சகல நவீன வசதிகளும் கொண்ட வீடு யாழ் நகர் ஒரு மைல் எல்லைக்குள் வாடகைக்குத் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 9796, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 9796

15 , வயதுக்கு மேற்பட்ட பெண்கள் கச்சான் அல்வா கொம்பனியில் வேலை செய்வதற்கு உடனே நேரில் வாவும். ''ஜெயவிலாஸ்'' 188, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 9792

சவர்க்கார . உற்பத்தியில் குறைந்தது 3 வருட அனுபவமுள்ள ஒருவர் உடனடியாகத் தேவை. சான்றுப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். தி. உருத்திரகோடீஸ்வரன், பிள்ளையார் கோவில் வீதி, கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை. 9789

வட மாகாணத்தில் பிரபல்யம் வாய்ந்த ரவல் சேவிஸ் ஸ்தாபனத்திற்கு நல்ல ஆங்கில அறிவுடைய பெண் லிகிதர் தேவை. விண்ணப்ப முகவரி, சுபா ரவல் சேவிஸ், 11/G, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 9797

### விற்பனைக்கு

மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் கந்தசாமிகோவிலுக்கு அணித்தாக கிணறு, லைற் வசதிகளுடன் கூடிய வீடும், 3½ பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: எஸ். ஆர். ஞானசுந்தரம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 9302

JAFFNA COLLEGE
WANTED

1. A fully qualified and experienced Librarian.
2. Junior School Clerk with Typing (English and Tamil) Accounts and Book-Keeping.

Apply stating qualifications and experience to the Principal, Jaffna College, Vaddukoddai on or before 12th August, 1978.

Principal.
Vaddukoddai. 9800

### தசாகாதி சபிண்டிகரணக் கிரியைகள்

சிவஸ்ரீ நா. இரத்தினசாமிக் குருக்கள்

6-7-78 வியாழக்கிழமை காலமாகிய எனது கணவனர் சிவஸ்ரீ நா. இரத்தினசாமிக் குருக்கள் அவர்களின் தசாகாதி சபிண்டிகரண கிரியைகள் 15-7-78 சனிக்கிழமை முதல் 18-7-78 செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும். ஸ்ரீமதி சொர்ணம்மாள் இரத்தினசாமிக்குருக்கள் (மனைவி) அமிர்தாம்பிகைஅம்மா திவராமலிங்கக்குருக்கள், மகேஸ்வரக்குருக்கள் பவானி(பிள்ளைகள்), பிள்ளையார்கோவில், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு. 9801

### மீண்டும் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர சடுதி மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன், நீதி அமைச்சரினல் மீண்டும் சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னள் அங்கத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மரண அறிவித்தல்

### H. T. ஞானசேகரம்

(P. W. D. ஓவசியர்)

யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயத்தைச் சேர்ந்தவரும், 28, வேம்படி ரோட்டில் வசித்தவருமான H. T. ஞானசேகரம் காலமானர். இவர் சிந்தியாவின் அருமைக் கணவரும், ரூபன், சுகந்தி, கேஷன், ஐவன், கெனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காங்கேசன்துறை சுகாதாரப் பரிசோதகர் அல்பேட் ஞானசேகரம், உரும்பராயைச் சேர்ந்த பொன்மலர் இராசசிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னரது பூதவுடல் இன்று 13-7-78 மாலை 4 மணியளவில் நம். 28, வேம்படி வீதியிலிருந்து நல்லடக்கத்துக்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 9804


கொன்சல்ரன்சி அன்ட் (F)பினன்ஸ் அன்ட் டிவலப்மென்ற் லிமிட்டெட்,
594, காலிவீதி, கொழும்பு - 3, இலங்கை.

**இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்திக்கென முக்கியமாக நிறுவப்பட்டது.**

அங்கத்தவராகும் விண்ணப்பப் படிவங்கள் மேற்படி விலாசத்திலுள்ள கந்தோரில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். அவைகள் தபாலில் அனுப்பப்பட வேண்டுமானல் -/15 சத முத்திரையுடன் சொந்த விலாசமிடப்பட்ட தபாலுறை அனுப்பி வைக்கவும். சபையின் ஞாபக விண்ணப்பமும் விதிகளும் அத்துடன் தலைவரினது விரிவான அறிக்கைகளும் ரூபா 3/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் தேவையான பத்திரங்களின் புகைப்படப் பிரதிகளை தமது ஏற்பாட்டின்படி வெளிநாடுகளிலுள்ள உத்தரவாதம்பெற்ற விநியோக நிலையங்களினூடாகப் பெற்றுக் கொள்ளலாம். நேரடியாக அவற்றைப் பெறவிரும்பும் அத்தகையோர் $ 1 (யு எஸ் டொலர்) காரியாலயத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

C. லோகநாதன்
தலைவர்
நிர்வாகசபை

9799


# தாய் தங்கை முன்னிலையில் வாலிபர் அடித்துக் கொலை

## சன்சோனி விசாரணையில் சாட்சியம்

(கண்டி)

''ரணசிங்கா என்ற வாலிபன் என்னைத் தாக்கினன். என்னை அவன் தாக்கியபோது எனது 4 வயது குழந்தைக்கும் காயம் ஏற்பட்டது. 75 வயதான என் அம்மாவையும் அவன் தாக்கினன்.''

இவ்வாறு கண்டியில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் பம்பரகெல்ல தோட்டத்தைச் சேர்ந்த பழனியம்மா சிவலிங்கம் (30 வயது) என்னும் பெண் சாட்சியமளிக்கையில் கூறினர்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் சொன்னதாவது:- ஆகஸ்ட் 20ம் திகதி காலை எட்டு வாலிபர்கள் என் வீட்டைத் தாக்கினர்கள். பயத்தினல் அனைவரும் காட்டுக்குள் ஓடி ஒளித்துக்கொண்டோம். வீட்டிலிருந்த பொருட்களைக் கொள்ளையடித்த எட்டு வாலிபர்களும் வீட்டிற்குத் தீ வைத்ததை ஒளிந்திருந்த நான் பார்த்துக்கொண்டிருந்தேன். இதன்பின் அவ்வாலிபர்களும் ஆயுதங்களுடன் எம்மைத் தேடி காட்டுக்குள் வந்தனர்.

எனது அம்மாவை சிரணங்கா என்பவன் தாக்கியபோது எனது அண்ணன் பேச்சிமுத்து வந்தார். அவரை

(6-ம் பக்கம் பார்க்க)

# ''வெட்டுவதற்கு இன்னும் இருவர்கிடைத்தால்போதும்''

(கண்டி)

''இருவரை வெட்டிவிட்டோம். இன்னும் இருவர் வெட்டுவதற்குக் கிடைத்தால் போதும்'' என்று ரணசிங்கா என்பவனும் மற்றொருவனும் பேசிக்கொண்டதை தேயிலைச் செடி மறைவில் இருந்து கேட்டுக்கொண்டிருந்தேன்''

இவ்வாறு கண்டியில் நடைபெறுவரும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் வெம்பிலித் தோட்டத்தைச்சேர்ந்த நிருபராணி தங்கவேலு சாட்சியமளிக்கையில் கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: லயத்தில் இருந்து சுமார் 25 யார் தூரத்தில் எனது மாமா கழுத்தில் வெட்டப்பட்டுக்கிடந்தார். அருகில் ரணசிங்கா வாளுடன் நின்றன். அவ்விடத்திலேயே துடிதுடித்து மாமா இறந்தார். ரணசிங்கா வேறுகொலையும் செய்துள்ளான் எனக் கேள்விப்பட்டேன் என்றார் (உ)

## கேள்வி விளம்பரம்

### சாவகச்சேரி நகரசபை

### விற்பனை

### பொதுச்சந்தைக் கட்டிடங்கள்

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான பொதுச்சந்தையிலுள்ள ஆறு சந்தைக் கட்டிடங்களை முழுமையாக அல்லது தனித்தனியாகக் கொள்வனவு செய்து அகற்றுவதற்குச் சீல் வைத்த கேள்விகள் 26-7-78-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4-45 மணி வரை என்னல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10/-ம் (மொத்தம் ரூ. 60/-ம்) இவ்வலுவலகத்தில் செலுத்தி இதற்கான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 24-7-78-ந் திகதி பிற்பகல் 12-30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

அனுப்பப்படும் கேள்விகளின் கடித உறையின் இடதுகை மூலையில் சந்தைக் கட்டிடங்களுக்கான கேள்வி என எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இதற்கென இக்கந்தோரில் இருக்கும் கேள்விப்பெட்டியில் போடப்படல் வேண்டும்.

26-7-78-ந் திகதி 4-45 மணிக்கு பின்பு கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகளை முழுமையாக அல்லது பகுதிகளாக ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. கூடிய கேள்விக்காரரின் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் பட்டமைபற்றி அறிவித்தல் கிடைத்த மூன்று தினங்களுக்குள் முழுத் தொகையும் கேள்விக்காரரால் செலுத்தப்படல் வேண்டும்.

மேலும் இதுபற்றிய விபரங்களை இக்கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
11-7-78. 9805

## தமிழ் மக்களின் சுயநிர்ணயஉரிமையை அரசு அங்கீகரிக்கவேண்டும்

(கொழும்பு)

''இலங்கையில் வாழும்சகல இன மக்களுக்கும் பூரணத்துவமான உரிமையுண்டு. அதே வேளையில் தமிழ்மக்கள் தேசிய இனத்தவர் என்றமுறையில் அடக்குமுறைக்குள்ளாகியிருக்கின்றனர். அவர்கள் தேசிய இனங்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கு போராட்டத்தில் ஈடுபடமுடியும்'' எனவே அவர்களது சுயநிர்ணய உரிமையை அரசு அங்கீகரிக்கவேண்டும்.

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 21வது வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இம்மகாநாடு காலி நகர மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எச். என். பெர்னன்டோ தலைமையில் நடைபெற்றது,

பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வது என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

- வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள 79 ஆசிரியர்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்க.
- பயிற்றப்பட்ட ஆசிரியர்களது சம்பளத்தைவிட குறைந்த சம்பளம் பெறும் 4ம், 5ம் தர அதிபர்களின் சம்பளத்தை உயர்த்துக.
- 7500க்கு மேற்பட்டபட்டதாரி ஆசிரியர்கள் தற்போது 250 ரூபா சம்பளமே பெறுகின்றனர். இவர்களது சம்பளத்தை பட்டதாரிகளின் சம்பளமாகிய 490 ரூபாவுக்கு உடன் உயர்த்துக.
- ஆசிரிய இடமாற்றச் சபையையும் பிராந்திய ஆசிரியர் கருத்தரங்குச் சபையையும் நிறுவுக.
- சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்க.

(இ)

கரபந்தாட்ட சுற்றுப் போட்டியில்

## சிவன் வி. கழகம் சாம்பியனுக தெரிவு!த்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையத்தால் மின்னொளியில் நடாத்திவந்த கரபந்தாட்ட சுற்றுப்போட்டியின் சாம்பியன் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது,

6 பேர் கொண்ட சுற்றுப் போட்டி 4 பேர் கொண்ட சுற்றுப்போட்டிகள் இரண்டிலும் திருநெல்வேலி சிவன் வி. கழகம் சாம்பியன் கேடயங்களைச்சுவீகரித்துக் கொண்டது.

6 பேர் போட்டியின் சாம்பியன் கேடயம் புன்னலைக் கட்டுவன் ''அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தமாக சிவன் வி. கழகத்திற்கு வழங்கப்பட்டது. 2-வது இடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தை நீர்வேலி ஐக்கிய வி. கழகம் பெற்றுக் கொண்டது. சிவன் வி. கழகத்திற்கு திரு. வி. சுப்பிரமணியம் தலைமைதாங்கினர் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக விளையாடிய சிவன் கழகத்தின் மின்னல் அடிகளுக்கு நீர்வேலி ஐக்கிய வி.கழகம் ஈடுகொடுத்து விளையாடியதெனினும் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை இரண்டாம்இடத்தைப் பெற்றுக்கொண்ட நீர்வேலி ஐக்கிய வி.கழகத்திற்கு திரு. எஸ். அப்புத்துரை தலைமைதாங்கினர் இரண்டு கோஷ்டிகளின் தலைவர்களின் ஆட்டம் மெச்சத்தக்க முறையில் சிறப்பாக இருந்தது மிகவும் நுணுக்கமாகப் பந்துகளை எதிர்பக்கத்

(6-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
The Eelanaadu

# ஆகஸ்ட் அகதிகளுக்கு 'ரோட்டரி அளித்துவரும் உதவிகள்

## 38-வது ஸ்தாபனவிழாவில்தலைவர்அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''எமது ஆய்வின்படி ஆகஸ்ட் கலவரத்தில் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்கள் தமது பிரதான உழைப்பாளர்களை இழந்திருந்தும் அரசு எந்தவித பண உதவியும் அளிக்க மறுத்துவிட்டது. இதற்குக் காரணம் அவர்களின் இறப்புப்பற்றி அத்தாட்சிப் படுத்த இயலாமல் இருந்தமையே. உண்மையிலேயே பாதிக்கப்பட்ட இவர்களுக்கு இன்று நாம், மாதாந்தம் பண வருவாய் கிடைக்கக் கூடிய வழிவகைகளை மேற்கொண்டு உதவியுள்ளோம்.''

இவ்வாறு ரோட்டறி கழக 38-வது ஸ்தாபன விழாவையொட்டி 'யாழ் இன்' ஹோட்டலில் நடைபெற்ற இரவு விருந்தில், ரோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் தமது அறிக்கையில் குறிப்பிட்டார். பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணன்டோ கலந்து கொண்டார். தொடர்ந்து தலைவர் தம் அறிக்கையில் தெரிவித்ததாவது;-

''ஆகஸ்ட் கலவரத்தில் இறந்த வேலுப்பிள்ளையின் குடும்பத்தின் அடைவு நகையை 3000 ரூபாவுக்கு மீட்டு, விற்றுவந்த தொகை 8000 ரூபாவையும் இலங்கை வங்கியில் வரவு வைத்துள்ளோம். இதன்மூலம் மாதம் 100 ரூபா வருமானம் திருமணம் முடிக்காத பெண் பிள்ளைகட்குக் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

இறந்த இராசரத்தினம் என்பவரதும் 6 வருட வட்டியைச் செலுத்தி நகையை மீட்டு 4 பிள்ளைகட்கும், விதவைக்கும் வருவாய்வர உதவியுள்ளோம். இறந்த சின்னராசா குடும்பத்திற்கு புதிய தையல் மெஷினும், 1000 ரூபா பணமும் வழங்கியுள்ளோம். இதனல் 15 வயதுச் சிறுமியும், விதவைத் தாயும் உழைத்துச் சாப்பிட வழி செய்துள்ளோம். இன்னும் பாதிக்கப்பட்ட சிலருக்கு பண உதவி வழங்கியுள்ளோம். யாழ்ப்பாணத்திற்கு மட்டும் அல்லாது திருகோணமலையிலும் உதவியுள்ளோம்.

''வேலை வாய்ப்பு நிலையங்களை அமைத்து, கண்ணடித் தொழிற்சாலையில் 24பேருக்கும், மின்தறி, கைத்தறி நெசவு ஆலையில் 20 பேருக்கும் நிரந்தரமாக வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுத்துள்ளோம். சிறந்த நடாத்துநர் போட்டியை ''ஈழநாடு'' பத்திரிகை மூலம் நடாத்தி மூன்று சிறந்த நடாத்துநர்கட்கு பரிசில்கள் வழங்கினோம். 16 பிரதான பாதைகளில் கடமை புரியும் சிறந்த நடாத்துனரைத் தெரிவு செய்து, அவர்களை ஊக்கப்படுத்தியுள்ளோம். நாம் சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் இணைந்து நடாத்திய விஞ்ஞான சித்திர கைப்பணிக் கண்காட்சியில் 19 பாடசாலைகள் பங்குபற்றின. 10,000 மாணவர்கள் இதனைப் பார்வையிட்டுப்பிரயோசனமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. தென் இந்தியாவிலுள்ள 'திண்டுக்கல் ரோட்டரி கழகம்' யாழ். வளாக நூலகத்துக்கு நூல்கள் பலவற்றை அன்பளிப்புச்செய்ய ஏற்பாடுகள் செய்து கொடுத்தோம், அகதிகள் புனர்வாழ்வுக்கு அமெரிக்க, ஆஸ்திரேலிய, மலேசிய, வட கரோலின, ஜப்பான், பிரான்சு, மேற்கு வேர்ஜினியா போன்ற நாடுகளில் உள்ள ரோட்டறி கழகங்கள் உதவி புரிந்தன. நிதிசேகரிப்புக்காக நாம் சென். பற்றிக்ஸ் பழைய மாணவர்களுடன் இணைந்து நடாத்திய பொருட்காட்சியில் ஒரு லட்சத்து ஆறுயிரம் ரூபாய் தேறிய வருமானமாகக் கிடைத்தது. இதில் அரை வாசித் தொகை 'பற்றிக்' கைத்தொழில் ஸ்தாபனம் இளைஞர்கட்கு அளிக்கும் தொழிற் பயிற்சிக்கென அவர்கட்கு வழங்கப்பட்டது. வட மாகாணத்தின் நீண்டகால தேவையான புற்று நோய்ச் சிகிச்சைநிலையம் நிறுவும் பணியில் நாம் 40,000 ரூபாவை மக்கள் வங்கியில் நிலையான வைப்புக்கணக்கில் இட்டுள்ளோம். வடஇலங்கைப் புற்று நோய்ச்சங்கம் இதற்காய வேலைகளை விரைவில் ஆரம்பிக்கும்போது பணம் கையளிக்கப்படும்.

'யாழ். பொது வைத்திய சாலையில் பார்வையாளர்கள் மழை, வெயிலுக்கு ஒதுங்க இடமின்றி அவலப்பட்டதைக் கண்டு 30,000 ரூபா செலவில் 250 பேர் தங்கக்கூடிய மண்டபம் ஒன்றை அமைத்துள்ளோம். சென்ஜோன்ஸ் கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களின் செயற்திட்டத்துக்கும் நாம் உதவினேம் இதற்ககா பின்தங்கிய பகுதியாகிய 'ராசாவின் தோட்டம்' பகுதியைத் தெரிவுசெய்து அப்பகுதி மக்களின் சுகாதார நோக்கை வலியுறுத்தினேம். 4 வைத்திய நிலையங்களை அங்கு ஆரம்பித்து எமது கழக டாக்டர்கள் அங்கு சென்று பணிபுரிந்தனர்.

'துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட ஆகஸ்ட் கலவரத்தில் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். கடை, வீடுகள் எரிக்கப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்டன. பல்லாயிரம் தமிழர்கள் வீடின்றி அகதிகளாக யாழ்ப்பாணம் வந்தனர். எமதுகழகம் லயன்ஸ்கிளப், வை. டபிள்யூ. சி. ஏ. எல்லாம் இணைந்து சமூகசேவைத் திணைக்கள உதவியைப் பயன்படுத்தி உணவு, உடை மருத்துவ வசதிகளை மேற்கொண்டோம். இதற்கென நிரந்தர 'அகதிகள் புனர்வாழ்வுக்குழு' அமைக்கப்பட்டது. இனக்கலவரத்தின் போது யாழ்நகரத்தில் 'நகர பாதுகாப்புத் தொண்டர் சேவை'யை உருவாக்கி இரவுக்காவல் புரிந்தோம். வெளி நாட்டிலுள்ள எம் நண்பர்கள் கழகங்களுக்கு அறிவித்து அதன்மூலம் 91,000ரூபா நிதி திரட்டினேம். 21 அங்கத்தவர் கொண்ட 5 அகதிக் குடும்பங்களைக் கனகராயன் குளத்தில்' 5 ஏக்கர் காணியில் குடியமர்த்தியுள்ளோம். இக் காணியை ஆயுர்வேத மருந்து விற்பனை வர்த்தகர் திரு. சுந்தரம் வழங்கினர். அங்கு 3 கிணறுகள் அவர்களால் வெட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் 8 குடும்பங்களை 8 ஏக்கர் காணியில் குடியமர்த்தவும் உத்தேசித்துள்ளோம். எனவே 'மாதிரி ரோட்டறிக் கிராமத்தை'ப் பார்க்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை. எமது கழகத்துக்கென நிரந்தர கட்டிடம் இல்லாத குறையைப் போக்க நிதி சேகரிக்கின்றோம். 25,000 ரூபா இப்போது சேர்ந்துள்ளது'' என்றும் தெரிவித்துள்ளார். (ச)

## கோதுமைக்கு மானியம்

கோதுமைமாவுக்கு அரசாங்கம் செலவிடும் மானியத்தைக் கொண்டு பன்னிரெண்டு லட்சம் ரூபாய் செலவிலான ஆயிரத்து இருநூறு கட்டடங்களைக் கட்டலாமென்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன களனி மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மான்யம் வழங்குவதன் மூலம் பெருமளவில் பணத்தைச் செலவுசெய்ய வேண்டுமா அல்லது நாட்டின் முன்னேற்றத்துக்காக சற்று கஷ்டப்படவேண்டுமா என்பதே இன்று எங்கள் முன்னுள்ள கேள்வியாகுமென்றும் ஜனதிபதி கூறியிருக்கிருர்.

ஆட்சிக்கு வருவதற்காக விலைவாசியைக் குறைப்போம், மக்களின் வாழ்க்கைச் செலவுப் பளுவை நீக்குவோம் என்று வாக்குறுதியளிப்பதும் பின்னர் ஆட்சி பீடத்துக்கு வந்ததும் உலகச் சந்தையில் பொருள்களின் விலை அதிகரித்துவிட்டதால் விலைவாசி உயர்வது தவிர்க்க முடியாதது என்று கூறுவதும் நமது நாட்டு மக்களுக்குப் பழகிப் போன விஷயம்.

ஆட்சி பீடத்தில் இதற்கு முன்னர் அமர்ந்தவர்களும் நாட்டின் முன்னேற்றத்திற்காக மக்கள் சிறிது கஷ்டப்படத்தான் வேண்டும் தியாகம் செய்யத்தான் வேண்டுமென்று கூறிவந்திருக்கின்றனர். ஆனல் மக்களுக்கு மீட்சிதான் இன்னமும் கிடைப்பதாக இல்லை.

நெல்விளைச்சல் இம்முறை அமோகமென்றும் இறக்குமதி அரிசியையும் நமது உள்ளூர்அரிசியையும் வெளிநாடுகளுக்கு விற்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர்கள் சிலர் அறிவித்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்குத் திட்டமிடும் அதே சமயம் கோதுமை மாவின் விலை உலகச் சந்தையில் அதிகரித்துவிட்டதால் இங்கும் அதன்விலையை உயர்த்த வேண்டியநிலை ஏற்படுமென்பதையும் பொறுப்பு வாய்ந்தவர்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றனர்.

கோதுமைமா இல்லாமல் நமது மக்கள் வாழ முடியாதா?

இரண்டாவது உலக யுத்தம் வருவதற்கு முன்னர் பசை காய்ச்சுவதற்கு மட்டுமே உபயோகப் படுத்தப் பட்டுவந்ததுதான் இந்தக் கோதுமைமா. அப்போதெல்லாம் அரிசி மாவும் குரக்கன், சாமை, ஒடியல் மாவுந்தான் மக்களுக்குஉணவாக இருந்தது.

அரிசியை ஏற்றுமதி செய்யும் யோசனையைக்கைவிட்டு கோதுமை மாவுக்குப் பதிலாக அரிசிமா கிடைப்பதற்கு வழிசெய்ய முடியாதா?

கோதுமைமா இறக்குமதியை நிறுத்திவிட்டு அரிசி மாவை உபயோகப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அந்நியச் செலாவணியும் மீதமாகும். கோதுமை மாவுக்கான மானியமும் பிறதேவைகளுக்குப் பயன்படுத்தலாம். இவ்விஷயத்தில் இனியும் அரசாங்கம் தாமதம் செய்ய வேண்டிய அவசியமில்லை: உள்ளூரில் நெல் விளைச்சல் அமோகமாக இருக்கும் போது உலகச் சந்தையில் கோதுமை மாவின் விலை உயர்வைப்பற்றி நாம் ஏன் வீணுகக் கவலைப்பட வேண்டும்?

## மணிவாக்கு

மனிதனுடைய சுகதுக்கங்களுக்கும் வெற்றி தோல்விகளுக்கும் மனமே காரணம். அதனுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தே மனிதனுடைய பண்பும் அமைகிறது.

— கவிகாளிதாஸன்

# ''மக்களுக்குப்பயன்படும் திட்டங்களைசெயல்படுத்துக'

## பனம்பொருள் உற்பத்திச்சபைக்கு காந்திசங்க தம்பிப்பிள்ளை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''பனம்பொருள் உற்பத்திச்சபை நிறுவப்பட்டதை அறிந்து மகிழ்ந்தோம். ஆனல் அவர்கள் செயற்படுத்தப் போவதாகச் சொல்லிய திட்டத்தை அறிந்து வேதனைப் படுகிருேம். அந்தச் சபையைச் சேர்ந்த ஒருவரை அண்மையில் சந்தித்தபோது ''நீங்கள் என்னசெய்யப்போகிறீர்கள்?'' என்றுகேட்டோம். அதற்கு அவர் 'போத்தல்களில் கள்ளை அடைத்து வெளியே அனுப்புவதுதான் எங்களது முதலாவது திட்டம்' என்ருர். சபை இதுபோன்ற திட்டங்களைக் கைவிட்டு மக்களுக்குப் பயனும் நன்மையும் ஏற்படவல்ல திட்டங்களைச் செயற்படுத்த முன்வரவேண்டும்.''

இவ்வாறு சங்குவேலியில் நடைபெற்ற கிராம சுயராஜ்ய இயக்க ஆரம்பவிழாவில் அகில இலங்கை காந்திசேவா சங்க கொழும்புக்கிளைச் செயலாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து அங்கு கிராம சுயராஜ்ய இயக்கத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. முன்னேடியாக மானிப்பாய் தொகுதியிலுள்ள சங்குவேலியில் சமீபத்தில் இவ்வியக்கம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் காந்திஜி இளைஞர் முன்னேற்ற மன்றத் தலைவர் திரு. பொ. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வாரம்பக் கூட்டத்தில் சிறப்பாக அகில இலங்கை காந்திசேவா சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா, பொதுச்செயலாளர் திரு. ஜே. எஸ். டேவிட், கொழும்புக் கிளைச் செயலாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை, தந்தை செல்வா அறங்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. தம்பிப்பிள்ளை சங்குவேலியில் கிராம சுயராஜ்ய இயக்கத்துக்காக மேற்கொள்ள வேண்டிய நிர்மாணப்பணிகளை விளக்கிவிட்டு 'புதிய தொழில்களைத் தொடக்குவதைவிட கிராமத்தில் ஏற்கனவேயுள்ள தொழில்கள் நலிந்து விடாமல் கவனித்துக் சொள்வதே மேலான பணி' என்றும் சொன்னர்.

திரு. கு. நேசையா பேசுகையில் ''இந்தியா பெற்ற சுதந்திரத்தின் அருட்டுணர்வினல்தான் இலங்கை சுதந்திரம் பெற்றதே தவிர இந்திய மக்களைப் போல இலங்கை மக்கள் சுதந்திரத்துக்காகப் போராடவில்லை. அதனல் இந்திய மக்களைப்போல எமது மக்களுக்குச் சுதந்திர உணர்வு இல்லை. இந்த உணர்வினை எமது மக்களுக்கு மிகவும் சிரமப்பட்டே ஊட்ட வேண்டியுள்ளது''என்ருர்.

விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றிய மானிப்பாய் தேசியப்பேரவை உறுப்பினர் திரு.வி. தர்மலிங்கம்கிராமத்தின் சுயதேவைகளைக்கிராமமே பூர்த்தி செய்வதுதான் கிராம சுயராஜ்ய இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை என்றும் பல சிரமதான இயக்கங்களை வெற்றிகரமாக நடாத்தி ஏனைய கிராமங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகின்ற சங்குவேலியிலே இவ்வியக்கம் ஆரம்பித்து வைக்கப் பெறுவது மிகவும் பொருத்தமாகவுள்ளது' என்றும் குறிப்பிட்டார்.

கிராம .அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.எஸ்.வடிவேல் கிராம சுயராஜ்ய இயக்கத்தின் வெற்றி தொண்டர்களின் உழைப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளதுஎன்றும், அதனல் இவ்வியக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள இளைஞர்கள் தயங்காமல் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

உடுவில் கிராம சபையின் விசேஷ ஆணையாளர் திரு. ச. குமாரசாமி, சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. த. செல்லத்தம்பி, மறுமலர்ச்சி மன்றத்தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## தாம்போதி புனரமைப்பு

(நெல்லியடி)

வல்லை -- துன்னலை வீதியில் உடைந்த நிலையிலுள்ள தாம்போதியைப் புனரமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைகள் அமைச்சின் நெல்லியடி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் மேற்படி தாம்போதி புனரமைப்பு வேலையை மேற்கொண்டுள்ளது.

வல்லை - துன்னலை வீதி காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு ஆனையிறவிலிருந்து உப்பு ஏற்றிச்செல்லும் பிரதான வீதியாக அமைநதுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்) (அ)

# ஸ்பெயினில் பயங்கர தீ விபத்து!

## 200 உல்லாசப்பயணிகள் கருகி மாண்டனர்!!

### தீப்பிடித்த லொறியினுல் 100 வாகனங்களும் தீக்கிரை

மட்றிட், ஜூலை 12

ஸ்பெயினில் உல்லாசப் பயணிகளின் விடுமுறை முகாம் ஒன்றில் நடந்த பயங்கர தீவிபத்தொன்றில் 200 உல்லாசப் பயணிகள் கொல்லப்பட்டனர் என்றும் 100 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஸ்பெயினின் கிழக்கு கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த விடுமுறை முகாம் ஒன்றுக்குள் தீப்பற்றிய லொறி ஒன்று புகுந்ததை அடுத்தே இப்பயங்கரத் தீவிபத்து நிகழ்ந்துள்ளது.

'காஸ்' போத்தல்களை ஏற்றிவந்த லொறியில் பிடித்த தீ பின்னர் முகாமிலும்பிடித்து முகாம் சாம்பராகியது என்றும் அதற்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த சுமார் 100 வாகனங்களும் தீக்கிரையாகியது என்றும் அறிவிக்கப்பட்டது.

பிரிட்டன், பிரெஞ்சு, பெல்ஜியம், மேற்கு ஜெர்மன் உல்லாசப் பயணிகளே இவ்விபத்தில் பலியாகினர்.

இத்தீவிபத்தை அடுத்து ஸ்பெயினின் கிழக்குக் கடலில் சில சடலங்கள் மிதந்து சென்றன என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## காரைநகரில் சுயவீடமைப்புத் திட்டம்

(வட்டுக்கோட்டை)

வீடமைப்புத் திணைக்களமும், சீ-நோர் அபிவிருத்தி நிறுவனமும் சேர்ந்து காரைநகரில் தோப்புக்காடு என்னும் இடத்தில் சுயவீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன. சீ-நோர் நல்லொழுக்க வாலிபர் இயக்க நிதியுதவித் தலைவர் திரு. ஆனெபியரொவ் இத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். இத்திட்டத்தின் மூலம் நாற்பது வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

# ஜனதாவின் துரதிர்ஷ்டமான அத்தியாயம் முடிந்துவிட்டது''

### பிரதமருக்கு ஒத்துழைப்பு வழங்கவும் சரண்சிங் விருப்பம்

புதுடில்லி, ஜூலை 12

ஜனதா கட்சி தேசிய நிர்வாகக் கமிட்டியின் கோரிக்கையை ஏற்று தாம் தமது ராஜினுமாக்களை வாபஸ் பெற உள்ளதாகவும், கட்சிக்கும் பிரதமருக்கும் தமது ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்குவதாகவும் திரு. சரண்சிங் உறுதி அளித்துள்ளார்.

ஜனதா தேசியக் கமிட்டியின்தீர்மானம் கிடைத்தபின் தமது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தியபின்னரே திரு. சரண்சிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'துரதிர்ஷ்டமான அத்தியாயம்' ஒன்று முடிந்து இப்போது புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் திரு. சரண்சிங் தீர்மானம் தமக்கு கிடைத்த பின்னர் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறியுள்ளார்.

#### 'பிளவு' என்ற பேச்சுக்கே இடமில்லை

ஜனதாகட்சியை உருவாக்க நானே தீவிரமாகப் பாடுபட்டேன். உருவாக்கிய நானே அதை பிளவுபடுத்துவேனு? என்றும் கூறிய திரு. சரண்சிங் ஜனதா கட்சியில் இனி பிளவு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் தெரிவித்தார்.

## "மூத்ததலைவர் தேசாய்' அவரே தீர்மானிக்கட்டும்''

'பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை நீங்கள் சந்திப்பீர்களா' என்று நிருபாகள் கேட்டபோது திரு. சரண்சிங் கூறியதாவது:

''பிரதமர் திரு. தேசாய் எமது மூத்த தலைவர். அவரே சந்திப்பு பற்றியும் எதிர்காலம் பற்றியும் தீர்மானிக்கவேண்டும்.

கட்சி உறுப்பினர்கள் நல்லெண்ணத்துடனும் நம்பிக்கையுடனும் ஒற்றுமையுடனும் தொடர்ந்து பணியாற்றவேண்டும்.

இதேவேளையில் தமது பதவியை ராஜினுமாச் செய்த பொதுக்காரியதரிசி திரு. ரவிராயும் தமது ராஜினுமாவை வாபஸ்பெற உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ)

## ரூ. 37 லட். 27 ஆயிரம் கடத்தல் முறியடிப்பு

சென்னை, ஜூலை 12

சென்னை சுங்கப் பகுதியினர் கடந்த மாதம் 37 லட்சத்து 27 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர் என்று சுங்கப்பகுதி உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவற்றுள் 9 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரங்கள் அடங்கும்.

கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக கடந்த மாதம் 20 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# 'சுதந்திரத்துக்குப் போராடிய இனம் தோற்றதில்லை''

(யாழ்ப்பாணம்)

''சுதந்திரத்திற்குப் போராடிய இனம் தோற்றது கிடையாது. ஹிட்லர் யூதர் பலரைக் கொன்று குவித்தார்கள். இதன் பலனுக பல லட்சம் யூத மக்களின் அழிவால் இஸ்ரேல் பிறந்தது. ஆனுல்துரதிர்ஷ்டம் அங்கு வாழ்ந்த பாலஸ்தீனர் நாடற்றவர்கள் ஆனுர்கள். இதற்காக அவர்கள் போராடி வருகிறுர்கள். அவர்களும் தம் நாட்டை என்றே பெற்றே தீருவர். இஸ்ரேல் உருவாக ஹிட்லர் காரணமானதுபோல தமிழ்ஈழப் உருவாக சிங்களக் காடையர்கள் தான் பொறுப்பு. அவர்களது கொடுமை பொறுக்க இயலாதுதான் தமிழினம் கடந்த ஆகஸ்டில் 'தம்ழ்ஈழமே முடிவு' என இறுதி முடிவு எடுத்து இருந்தது.''

இவ்வாறு சுதந்திரன் அலுவலகத் திறப்புவிழாவில் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினுர்.

''என்னைத் தந்தை செல்வாவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவைத்தது சுதந்திரன் பத்திரிகையே தந்தை செல்வா தான் எடுத்த முயற்சிகளை இறுதிவரை கைவிடமாட்டார் என்பதற்கு அவரது கட்சியும் அவரது பத்திரிகையும் இன்று நிலைத்து நிற்பதே சன்று என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''சிங்கள மக்களிடையேசென்றுள்ள அரசாட்சி எம்கையில் வரும் நாள் அதிக தூரத்தில் இல்லை. இதனை கோணேசர் கல்வெட்டில் எழுதப்பட்ட தீர்க்கதரிசனத்தில் காணலாம் என்ருர்.

டாக்டர் தர்மலிங்கம் தலைமை வகித்தார். திரு. சந்திரகாசன், பண்டிதர் கர். பொ. இரத்தினம், சட்டத்தரணி விசுவநாதன், யாழ். எம். பி. வி. யோகேஸ்வரன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், கோப்பாய் எம்,பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, திரு. அலோசியஸ், கோவை. மகேசன் ஆகியோர் உரை ஆற்றினர்- தந்தை செல்வாவின் உருவப்படத்தை திரு. வி. யோகேஸ்வரன் திறந்துவைத்தார். (ச)

# ராஜினுமாக்களை வாபஸ் பெறுக

## சரண்சிங்கிடம் கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 12

ஜனதா கட்சிப் பதவிகளிலிருந்து ராஜினுமாச் செய்த திரு. சரண்சிங் தமது ராஜினுமாக்களை வாபஸ்பெறவேண்டும் என்று ஜனதா தேசிய நிர்வாகக் கமிட்டி திரு. சரண்சிங்கைச் கோரியுள்ளது.

இதுதொடர்பான தீர்மானம் ஒன்று மேற்படி கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அமைச்சரவையிலிருந்தும், ஜனதா கட்சியின் தேசிய நிர்வாகக்கமிட்டியிலிருந்தும் திரு. சரண்சிங் செய்துகொண்ட ராஜினுமாவையே அவர் விலக்கிக்கொள்ளவேண்டும் என்று கமிட்டி கோரியுள்ளது.

பொதுக்காரியதரிசி திரு. ரவிராய் மூலம் இத்தீர்மானம் திரு. சரண்சிங்குக்கு அனுப்பப்பட்டுள்ளது. (இ)

## நெல்லியடியில் சுகாதாரவிழா

(நெல்லியடி)

நெல்லியடிப் பட்டினசபைப் பிரதேசத்தில் தேசிய சுகாதார விழா கொண்டாடப்படவுள்ளது. 15-ந் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இச் சுகாதார விழாவிற்கான ஏற்பாடுகளைச் சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். ருெபேட் கவனித்து வருகிருர்.

பாடசாலை மாணவர்களின் பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ள இவ் விழாவில் யாழ். மாவட்ட சுகாதாரசேவை அத்தியட்சகர் உட்படப் பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவர். (அ)

# 'கல்விவளர்ச்சியில் பெற்ருர் சிரத்தை அவசியம்;

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கதீஜா மகாவித்தியாலய புதிய மாடிக் கட்டிடத்தில் 'மௌலூத்' ஓதி புனித மிஃறுஜ் தினம் மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அதிபர், ஆசிரியைகள், மாணவிகள், தாய்மார் ஆகியோர் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

விழா இறுதியில் நன்றிதெரிவித்துப் பேசிய கல்லூரி அதிபர் செல்வி எல். மொஹிதீன் ''புதிய பாடசாலை இதுவரைகாலமும் நிலவிவந்த இடப்பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்த்துள்ள போதிலும் சட்டட வசதி போதாது. யாழ்ப்பாண முஸ்லிம் பெண்கள உயர்கல்வி பெறுவதற்கேற்ற வகுப்பறைகளையும் ஆய்வுகூடங்களையும் நிர்மாணிக்க அரசையே எப்பொழுதும் எதிர்பார்க்காமல் வசதிபடைத்த பெருந்தன்மை கொண்ட பெற்ருேர் முன்வரவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பேசிய அதிபர், பாடசாலைக்கு மாணவர் வருகை சீராக இருக்கவேண்டும் என்றும் பெற்ருேர் தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் சிரத்தை எடுத்தால்தான் கல்விவளர்ச்சி துரிதமடையும் என்றும் கூறி பாடசாலைக்கும் பெற்ருேருக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தினுர் [அ]

## பாலில் கலப்படம்: மூவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாலில் கலப்படம் செய்த குற்றத்திற்காக, மூவருக்கு தலா 200 ரூபா அபராதம் விதித்து யாழ்ப்பாண நீதவான் திரு. கே. வி நவரெத்தினம் தீர்ப்பு வழங்கினுர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ச. ஜெயசிங்கம், ச. செல்வராஜா, பெ. பொன்னுச்சாமி ஆகிய மூவருக்கு எதிராக, யாழ். மாநகரசபை உணவுப் பரிசோதகர் திரு. க. குமரகுரு இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

சந்தேக நபர்களை திடீர் சோதனை செய்தபோது இருவரினது பாலில் 20 சதவீதம் நீர் கலந்திருக்கவும், ஜெயசிங்கத்தின் பாலில் 21 சதவீதம் கொழுப்புச் சத்து குறைவாகவும் 20 சதவீதம் நீர் கலந்திருக்கவும் காணப்பட்டதாம்.

திடீர் சோதனைகளை உணவுப் பரிசோதகர் திரு. க. குமரகுருவும், யாழ். ஆஸ்பத்திரி உணவு அலுவலர் திரு. சிவராஜேஸ்வரனும் மேற்கொண்டிருந்தனர்.

ச. ஜெயசிங்கத்திற்கு இரு குற்றங்களுக்குத் தலா 200 ரூபா வீதம் 400 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [உ]

## 451 புகார்கள்

(வட்டுக்கோட்டை)

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பகுதியில் உள்ள கிராமங்களில் காரைநகரில் இருந்தே அதிக முறைப்பாடுகள் கடந்த ஆறு மாத காலத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்டுள்ளனவாம். கடந்த 6 மாத காலத்தில் 451 முறைப்பாடுகள் காரைநகரில் இருந்து பதியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

### பிரதமர் தேசாய் மீதான

# ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய கடிதங்களை வெளியிடவேண்டும்

## இந்திரா காங்கிரஸ் எம். பி. கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 12

'பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், மற்றும் அமைச்சர்களின் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்துறை அமைச்சருக்கும் பிரதமருக்கும் இடையே நிகழ்ந்த கடிதப் பரிமாறல்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படவேண்டும்.'

இவ்வாறு இந்திராகாங்கிரஸ் எம். பி. திரு. ஸ்டீபன் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இதுகுறித்து வெளிவந்த செய்திகள் ஆதரவற்றவை என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன எனினும் பொறுப்புவாய்ந்த அரசின் இரகசியதஸ்தாவேஜுகளை பார்வையிடும் உள்துறை அமைச்சர் எவ்விதந்தியும் ஆதாரமற்ற தகவல்களைச் கூறியிருக்கமாட்டார். எனவே இதுகுறித்து விபரங்களை அரசாலோக சபையில் வெளியிடவேண்டும். மக்களுக்கு இதுபற்றிய விபரங்களை அறிய உரிமையுண்டு. எனவே இதனை வெளியிடவேண்டும் என்றும் திரு. ஸ்டீபன் கோரியுள்ளார். (இ)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
3-வது வாரம்
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
**வெள்ளிக்கிழமை விரதம்**

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
அசோகன்
**ராமன் தேடிய சீதை**

**RIO** (Jaffna) Phone: 7607
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 p. m.
யாழ். றியோ சினிமா ஸ்தாபனத்தினர் பெருமையுடன் அளிக்கும் இந்த ஆண்டின் வெற்றிச் சித்திரம்
Telly Favalas, Peter Fonda, Christopher Lee
in
**DIAMOND MERCENARIES**
(வைரக்கல் கொள்ளையர்)
கொழும்பில் 200, கண்டியில் 75, கொட்டகை நிறைந்த காட்சிகள். யாழ். நகரில்..............?

**சாந்தி** யாழ். நகர் போன்: 7612
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
ஜெய் - மேஜர் - ரங்கராவ் - A.V.M.ராஜன் - பிரமிளா
**அன்புச் சகோதரர்கள்** (புதியபிரதி)
Next Attraction Alfred Hitchcock's
FOREIGN CORRESPONDENCE

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லக்ஷ்மி - நாகேஷ் - மனோகர்
நடித்த
கே. பாலசந்தரின்
**நூற்றுக்கு நூறு**
(புதிய பிரதி)
ஒவ்வொரு ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும் நிச்சயம் பார்க்கவேண்டிய படம்.

**REGAL** Daily at 4-45, 7- & 9-30 P. M. on'y.
Jaffna Burt Reynolds in
**"Nickelodeon"**
color (Comedy)

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
(புத்தம் புதிய பிரதி)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி. ஆர். - ஜெயலலிதா
**அன்னமிட்டகை**

**ராஜா**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
**மன்மத லீலே**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராணி**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — சரோஜாதேவி
**பனித்திரை**

**லிடோ**
(யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
**மதனமாளிகை**

## நல்லூர் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய பரிபாலன சபை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய புதிய பரிபாலனசபை யாழ். மாநகர விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம் தலைமையில் கூடி புதிய பரிபாலனசபை நிர்வாக சபை அமைக்கப்பட்டது. நிர்வாகசபை உறுப்பினர்கள் வருமாறு:-

போசகர்கள்: திரு. க. சிவஞானம், திரு. அ, ஐயாத்துரை, திரு. க. பரராஜசிங்கம், திரு. இ. நாகரத்தினம், தலைவர்: திரு. ச. கனகலிங்கம், உபதலைவர்: திரு. சி. துரைசாமி, செயலாளர்: திரு. க. மாணிக்கவாசகர், உபசெயலாளர்: திரு. பா. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: திரு. த. கனகரத்தினம். உபபொருளாளர்: திரு. இ. ஸ்ரீதரன், நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள்: வ. சிவபாலரத்தினம். க. இளையதம்பி, செ. குஞ்சிதபாதம், இ. வேலாயுதபிள்ளை, அ, மகாதேவன், மா. முத்துக்குமாரு, க. குமாரவேலு. க. சந்திரசேகரம், சி. சோமசுந்தரம்.

(யாழ்ப்பாணம்)

வடமாநில கல்வித் திணைக்கள பொழுதுபோக்குக் களரியின் 1978ம் ஆண்டுக்கான நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரியப்பட்டுள்ளார்கள்:

போஷகர்: திரு. ரி. மாணிக்கவாசகர், தலைவர்: திரு. என். ஆர். பாலசிங்கம், உபதலைவர்: திரு. ஏ. மகாலிங்கம், திரு. ச. திருநாவுக்கரசு, செயலாளர்: திரு. கு. ந. இராசநாயகம். உபசெயலாளர்: திரு. எஸ். ஆர். பரமேஸ்வரன், பொருளாளர்: திரு. ச. ஜெயராசா, உபபொருளாளர்: செல்வி க. கமலபாரதி. நூலகப்பொறுப்பாளர்: திரு. செ, மெற்றூஸ் மெயில், கலாச்சார பொதுநல சேவையாளர்: திரு.ச.பொன்னையா. மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக பின்வரும் ஐவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். ஏ. நடராசா, கு. ஜெயராசசிங்கம், ச. ஆனந்தமயில், ஐ.சண்முகலிங்கம், ச. கோபாலசிங்கம்.

## தோல் திருடர்கள்

(மோதற)

மட்டக்குளியில் உள்ள டி. ஐ. சப்பாத்துத் தொழிற்சாலைக்குள் புகுந்த இருவர் 9000 ரூபா பெறுமதி மிக்க தோலைத் திருடினராம்.

இவர்கள் வெளியே வந்தபோது பாதுகாப்பு உத்தியோகத்தர் கண்ணில்படவேதோலை எறிந்துவிட்டுத் தப்பியோடிவிட்டனராம்.

சந்தேகநபர்களைப் பொலிஸார் தேடிவருகின்றனர். (உ)

## 8 மணிக்கு திறக்கஉத்தரவு

(கொழும்பு)

நாடுமுழுவதிலும்கூட்டுவுறக் கடைகளை காலை 8 மணிக்கே திறந்து விடுமாறு உணவு கூட்டுறவு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இப்போது கூட்டுறவுக் கடைகள் காலை 9 மணிக்கே திறக்கப்பட்டுவருகின்றன. (இ)

## பிரிவுபசாரம்

(திருநெல்வேலி)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கணக்காளர் திரு. குமாரசாமி ஜெயக்குமார் புலமைப்பரிசில் பெற்று கூட்டுறவு முகாமைத் துறைப்பயிற்சி பெறுவதற்கு ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு செல்வதையொட்டி அன்னாருக்கு நேற்றுச் சங்க மண்டபத்தில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. பலர் பாராட்டும் ஆசியும் வழங்கினர்- (இ)

# சங்கச் செய்திகள்

## இலங்கை வங்கித் தமிழ் இலக்கிய மன்றம்

(கொழும்பு)

இலங்கை வங்கி தமிழ் இலக்கிய மன்றத்தின் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் வங்கித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. சிவஞானசேகரம், துணைத்தலைவர்: திரு. கு. சிவகணநாதன், திருமதி இ. மனுவேல்பிள்ளை, செயலாளர்: திரு. க. இரவீந்திரன். துணைச்செயலாளர்: திரு. க. திருவருள்வள்ளல், பொருளாளர்: திரு. வ. சுப்பிரமணியம், துணைப்பொருளாளர்: திரு.க. திருஞானம். நூலகர்: திரு. க. உலகநாதன், துணைநூலகர்: திரு. ச. மு. சஹிர். நிறைவேற்றுச்சபை உறுப்பினர்கள்: திருவாளர்கள்: க. மகேந்திரநாதன், இ. தியாகராஜபிள்ளை, மு. கிரிதரன், அ. பாக்கியநாதன், வை. கே. மரைக்கார் எஸ்.குருநாதன், பெ. இராமநாதன், செல்வி மி. மதுரநாயகம்.

கூட்டத்தில் "தமிழலை" என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டது.

(யாழ்ப்பாணம்)

தமிழ் மகளிர் பேரவை வேலணைக்கிளை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் காவலூரர் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் முன்னிலையில் அமைக்கப்பட்டது. பின்வருவோர் அலுவலர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திருமதி நா. யோகநாதன், உபதலைவர்: செல்வி இ. சிவனேசபிள்ளை, செயலாளர்: செல்வி நா. துரையப்பா, துணைச்செயலாளர்: செல்வி அ. சாந்தலிங்கம், பொருளாளர்: திருமதி ப. சிவஞானம்,

நிர்வாகக்குழுவுக்கு அறுவர் தெரிவாகினர்.

(யாழ்ப்பாணம்)

தமிழ்மகளிர் பேரவை நாரந்தனைக்கிளை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் காவலூரர் எம். பி. திரு. கா. பொ, இரத்தினம் முன்னிலையில் அமைக்கப்பட்டது. பின்வருவோர் அலுவலர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: செல்வி இரத்தினகலா கனகரத்தினம், உபதலைவர்: செல்வி மனோரதி எட்வேட், செயலாளர்: செல்வி தர்மபூபதி அமிர்தலிங்கம், உபசெயலாளர்: செல்வி றஜனி யோசப், பொருளாளர்: செல்விவனஜா அன்ரன். நிர்வாகக்குழுவுக்கு அறுவர் தெரிவாகினர்.

## 'ஆலயவரலாற்றுப்பதிகங்கள் அவசியம் வெளிவர வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"கிறிஸ்தவ மத குருவானவரின் வேண்டுகோளுக்கிணங்கி கிறிஸ்தவ விவிலிய நூலான பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்ததினல் ஆங்கில உலகில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த தமிழ் அறிஞராக நாவலர் பெருமான் விளங்கினர். அதேபோல் கீழைக்கரம்பன் முருகமூர்த்தி ஆலயத்தின் பேரில் தோத்திரப்பதிகம் இயற்றியதன் மூலம் 'பரம்பரைக் கத்தோலிக்கரான காவலூர்க் கவிஞர் செல்வராசா சைவ மக்களின் உள்ளங்களில் என்றும் அழியா இடத்தைப் பெற்றுள்ளார்."

இவ்வாறு கரம்பன் கிழக்கு முருகமூர்த்தி ஆலய தோத்திரப்பாடல் அரங்கேற்றவிழாவில் பேசிய விழாத் தலைவரும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை அத்தியட்சகருமான டாக்டர் ஜெகநாதன் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கவிஞர் செல்வராசா ஒரு கத்தோலிக்கராக இருந்தபோதும் நயினை நாகபூஷணி அம்பாள். நல்லூர்க்கந்தன், செல்வச்சந்நிதி முருகன் இன்னும் பல ஆலயங்கள் மீதும் தோத்திரங்கள்பாடியுள்ளார்.

கீழைக்கரம்பன் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய தோத்திரப் பாடல்களை அச்சுவாகனமேற்றிப் புத்தக ரூபமாக்கி இலவசமாக மக்களுக்கு விநியோகித்த முருக பக்தன் பிரபாகரன் போன்று ஏனைய ஆலயங்களும் இக்கவிஞரின் பாடல்களைப் பெற்று அவற்றையும் புத்தக ரூபமாக்கி இலவசமாக விநியோகிக்க கருணை உள்ளம் கொண்ட சைவமக்கள் முன்வந்தால் அந்த ஆலயங்களின் சிறப்பையும் சைவமக்கள் அறியக்கூடியதாக இருக்கும்" என்று கூறினர்.

திரு. சு, தர்மலிங்கம் சங்கீதபூஷணம் சந்திரசேகரம் ஆகியோரும் பேசினர்.

கவிஞரின் பாடல்களை பக்திப்பாடலரசு ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி இசையமைத்துப் பாடினர். (கொக். நி.)

## மன்னரில் ரூ. 24,000 நகைகள் திருட்டு

(மன்னர்)

மன்னர் பொலிஸ் பகுதியில் பெரும் நகைத்திருட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இரவுவேளை மன்னர்ப் பகுதி வீடொன்றில் நுழைந்த திருடர்கள் 24, 400 ரூபா பெறுமதிமிக்கதங்கநகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டு 10-ந் திகதி நடைபெற்றதாம்.

பொலிசார் தீவிர புலன் விசாரணை நடத்துகின்றனர். (உ)

## ரயிலுக்குக் கல்வீச்சு

(கல்கமுவ)

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த இரவு ரெயில் கல்கமுவாவிற்குச் சமீபத்தில் ஓடிக்கொண்டிருந்தவேளைவிஷமிகளின் கல்வீச்சுக்கு உள்ளானது. கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் நடந்தது. இக் கல்வீச்சினல் பலர் காயம் அடைந்தனர். காயமடைந்த ரயில் பிரயாணிகள் ரயில்வே பாதுகாப்புப் பொலிசாரினல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (உடு-நி-உ)

(மட்டக்களப்பு)

மண்டபத்தடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வீதியில் மேற்படி ஊர் பொதுமக்களால் 'அருச்சுனன் தவநிலை' என்னும் வடமோடி நாட்டுக்கூத்து அரங்கேற்றம் செய்யப்பட்டது.

இவ்வைபவம் மேற்படி கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு. மா. திசவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (உ)

# "அரசு ஊழியர் - மக்கள் தொடர்பு வலுவுறவேண்டும்"

## யாழ். அரசாங்க அதிபர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"உங்களது தேவைகள் சகலவற்றையும் நான் ஒரு நாளிலே செய்துதர முடியும் என உறுதியளிக்கமுடியாது, ஆனால் படிப்படியாக உங்கள் பிரச்னைகளுக்கு முடிவுகாண வழிவகுப்பேன்" இவ்வாறு முதன் முதலாக நெடுந்தீவுக்கு விஜயம் செய்த யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோ, அவரைச் சந்தித்த கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. செந்தில்வடிவேல் தலைமை தாங்கினார்.

தண்ணீர், போக்கு வரத்து, வீட்டுவசதி போன்ற பல தேவைகள் பற்றிச் சங்கப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் அலசிஆராய்ந்தனர். அவர்களுக்கு பஸ்சேவையில்லாமையினால் உடனடியாகவே பஸ் சேவை ஒழுங்கு செய்துதரத் தன்னாலியன்ற நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

கூட்டத்தின்பின் அரசாங்க அதிபர், ஊழியர் சகிதம் நெடுந்தீவின் பல பகுதிகட்கும் சென்று மக்களின் தேவைகளையும், குறைபாடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

முதல்நாள் மாலை அரசாங்க அதிபர் நெடுந்தீவுத் துறை முகத்திற்குச் சென்றிறங்கியதும் அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. (ச-உ)

# இன்று தொகுப்புரை

(கொழும்பு)

துரையப்பா கொலைவழக்கில் முதலாம் எதிரியான கலாபதி மீதான கொலைக் குற்றம் தொடர்பாகச் சட்டத்தரணி எம். சிவசிதம்பரமும், அரசசட்டத்தரணியும் இன்று தமது தொகுப்புரைகளை நிகழ்த்துவார்கள்.

திரு. சிவசிதம்பரம், தொகுப்புரையைத் தமிழில் நிகழ்த்தப்போவதாக நேற்று நீதிபதியிடம் தெரிவித்தார்.

நீதிபதி, தமது விளக்கவுரையைத் திங்கட்கிழமை நிகழ்த்துவார்.

# துரையப்பா கொலை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

5 எதிரிகளுக்கு எதிரான சதி குற்றச் சாட்டுக்கும் 3-ம் 4-ம், 5-ம் எதிரிகளுக்கெதிரான கொலை உடந்தைகுற்ற சாட்டிற்கும் எதிராக போதிய சாட்சியம் இல்லை எனத் தெரிவித்தார்.

நீதிபதி: 2-ம் எதிரி மீதான குற்றச்சாட்டு பற்றி என்ன நினைக்கிறீர் என்று கேட்டபோது அவருக்கு எதிராகவும் போதிய சாட்சியம் இல்லை என திரு. செனரத்தின கூறினார்.

பொலிஸ் அதிபர் சில்வா, இவ்வழக்கு விசாரணை தொடர்பான தாஸ்தாவேசுகள் பற்றி சாட்சியமளித்தார்.

நீதிபதி சோஸா எதிரிகளிடம் கூறியதாவது: அரச தரப்பில் முக்கிய சாட்சிகள் இவ்வளவுதான். 3 குற்றச் சாட்டுகள் உள்ளது. முதலாவது குற்றச்சாட்டு, 5 எதிரிகளும் சதி செய்தது. முதலாம் எதிரி மீது கொலைக் குற்றச்சாட்டு, இரண்டாவது குற்றச்சாட்டு. மூன்றாவது, கொலைக்கு உடந்தையான குற்றச்சாட்டு. சதிக் குற்றச்சாட்டுக்கு எந்தவித சாட்சியமும் இல்லை. சந்தர்ப்பம் இருந்தும் மூன்றும் எதிரி அடையாளம் காட்டப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் 1ம், 3ம் குற்றஞ் சுமத்தப்பட்ட 2ம், 3ம், 4ம், 5ம் எதிரிகளை விடுதலைசெய்யும்படி ஜூரி சபையினரைப் பணிக்கிறேன்,

ஜூரி சபையினர் ஏகமனதாக 2ம், 3ம், 4ம், 5ம் எதிரிகள், சதி, உடந்தைக் குற்றச் சாட்டுகளின் நிரபராதிகள் எனத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து காலை 9-55 மணிக்கு 2ம், 3ம். 4ம் 5ம் எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர். கொலைக் குற்றச்சாட்டின் பேரில் 1ம் எதிரி மீது மட்டும் விசாரணை நடக்கின்றது.

### அரசு தரப்பினர் கடமை

1ம் எதிரியிடம் நீதிபதி கூறியதாவது: "உம்மிடம் எதிர்வாதம் கோரப்படுகிறது. நீர் விரும்பினால் சாட்சியமளிக்கலாம் அல்லது சாட்சிகளை ஆஜர்செய்யலாம். விரும்பினால் சாட்சிக்கூண்டில் வந்து சாட்சியமளிக்கலாம். அது பெறுமதி கூடியது. அப்படியானால் குறுக்குவிசாரணை செய்யப்படுவீர். ஜூரிகளும் கேள்விகள் கேட்பார்கள். நீர் விரும்பினால் எதிரி கூண்டில் நின்று சாட்சியமளிக்கலாம். அப்படியானால் உம்மை குறுக்குவிசாரணை செய்யமாட்டார்கள். அதுவும் சாட்சியமாக அமையும். நீர் சாட்சியம் சொல்லவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விரும்பினால் கூறலாம். இந்த வழக்கில் நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

1ம் எதிரோ எதிரிசார்பிலோ எவரும் சாட்சியம் அளிக்கவில்லை

இன்று (வியாழன்) காலை வரை விசாரணை ஒத்திப் போடப்பட்டுள்ளது. (க)

# ஒரே நாளில் இருவர் விஷமருந்தித் தற்கொலை

(மாவிட்டபுரம்)

ஒரே நாளில் ஒரே கிராமத்தில் 40 வயது நபர் ஒருவரும் 29 வயது இளம் பெண் ஒருவரும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று கீரிமலையில் இடம் பெற்றுள்ளது.

கீரிமலையைச் சேர்ந்த மயிலு முருகையா என்பவரும், நடுவில் திருச்செல்வம் என்னும் இளம் பெண்ணுமே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர்.

இவ்விரு மரணங்கள் குறித்தும் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்திய சமயம், மேற்படி நபர் கடன் தொல்லைகளால் பெரிதும் அவஸ்தைப்பட்டதாகவும், கடன்காரர்கள் நெருக்கியதால் தற்கொலை செய்யப் போவதாக பலமுறை கூறிவந்ததாகவும், சம்பவதினம் கொல்லங்கலட்டி வீதியில் நஞ்சருந்திய நிலையில் கிடக்கக் காணப்பட்டதாகவும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டதையடுத்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது

மேற்படி இளம்பெண்ணின் மரணம் தொடர்பாக நடந்த மரணவிசாரணையில் மேற்படி இளம்பெண் தமது தமையனாரின் நகைகள் சிலவற்றைப் பெற்று எவருக்கோ கொடுத்துவிட்டதாகவும், தற்கொலைசெய்த மேற்படி நபரான மயிலு முருகையாவிடம் அவற்றைக் கொடுத்திருக்கலாமெனவும் சம்பவதினம் நகைகளைத் தருமாறு தமது தமையன் நெருக்கியதையடுத்த கிருமிநாசினி அருந்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இம்மரணம் தற்கொலை என தீர்ப்பு அளிக்கப்பட்டது.

காங்கேசன் துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். (உ)

## தாய்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வாலிபர்கள் அனைவரும் சேர்ந்து தாக்கினார்கள். என் அம்மா முன்னிலையிலும் என் முன்னிலையிலும் அண்ணன் அவர்களால் கொல்லப்பட்டார்.

அன்று பின்னேரம் பொலிசார் வந்தனர். அரைகுறையாக எரிந்திருந்த என் வீட்டிற்கு பொலிசார் முன்னிலையிலேயே அவர்கள் மீண்டும் தீ வைத்தனர். பொலிசார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டதும் ஓடி விட்டனர். ஒருவரும் கைது செய்யப்படவில்லை" என்றார், (உ)

## சிவன்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தில் செலுத்தி தம்து புள்ளிகளை அதிகரித்துகொண்டமை சிவன் வி.கழகத்தின் திறமைக்கு எடுத்துகாட்டாக விருந்தது. இரண்டு கழகங்களும் ஈடுகொடுத்து விளையாடி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டன சிவன் கழகவீரர் திரு. எம். பத்மநாதனின் "டாஸ்," அடிகள் பார்வையாளர்களைக் கவர்ந்திருந்தது. இப்போட்டிக்கு திரு. சிவக்கொழுந்து (சின்னச்சட்டம்பி) மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

நான்குபேர் போட்டியில் திருநெல்வேலி சிவன் வி. கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஐக்கிய வி.கழகம் மோதிக்கொண்டது. முதலாவதாக நடைபெற்ற இப் போட்டியின் ஆரம்பத்திலேயே சிவன் வி. கழகம் தமது புள்ளிகளை உயர்த்தத் தொடங்கியது. எனினும் அச்சுவேலி ஐக்கிய வி.கழகம் தமதுபுள்ளிகளை சமமாக்க விறுவிறுப்பாக விளையாடியது இருந்தும் சிவன் வி.கழகம் சாம்பியனைகத்தெரிவு செய்யப்பட்டு திரு. எஸ். சண்முகராசாவின் அன்பளிப்பு கேடயத்தை தமதாக்கிக் கொண்டது. 2வது இடத்துக்குரிய வெற்றிக்கிண்ணம் அச்சுவேலி ஐக்கிய வி. கழகத்திற்கு திரு. எஸ். அரியகுட்டி தலைமைதாங்கினார். மத்தியஸ்தராக திரு. எம். ஜெகநாதன் கடமையாற்றினார்.

# ஐஆர்-36 புதிய இன நெல்

மணிலா, ஜூலை 12

குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைக் கொடுக்கும் புதிய இன நெல்லை, பிலிப்பைன்ஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஐஆர்-36 என்ற இந்த நெல் இனத்திலிருந்து 25 ஏக்கரில் 7,200 கிலோ நெல்லை அறுவடை செய்யலாமென்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நெல்லை 100 நாட்களில் அறுவடை செய்யலாம். (இ)

# விக்ரோறியா விளையாட்டுப் போட்டி இன்று

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரேறியாக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாண நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் கலந்து கொள்கின்றார். திருமதி ச. நவரத்தினம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குவார். (இ)

# வசாவிளான் பூசாரி கொலை: இருவருக்கு றிமாண்ட்!

(மாவிட்டபுரம்)

வசாவிளானில் கோவில் பூசாரி ஒருவர் அடித்துக் கொலைசெய்யப்பட்டு கயிற்றில் தொங்கவிடப்பட்டிருந்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசார் இருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இருவரும் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

வசாவிளான் வன்னியர் கோவில் பூசாரியாரான மாதர் வல்லிபுரம் என்பவர் தாம் பூசைசெய்த கோவிலுள் அடித்துச் கொலைசெய்யப்பட்டு கயிற்றில்தொங்கவிடப்பட்டிருந்த சம்பவம் தொடர்பாக காங்கேசன் துறைப் பொலிசார் வசாவிளானை சேர்ந்த செல்லத்துரை குணபாலசிங்கம், நடராஜா சத்தியசீலன் ஆகியோரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அச்சமயம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக் குமாரசாமி இருவரையும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தார். (உ)

# இன்று

(யாழ்ப்பாணம்)

சுருவில் ஐயனார் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது.

பண்ணிசைக்கலாநிதி எஸ். கே. சிவபாலன் திருமுறை இன்னிசைக்கச்சேரி நிகழ்த்துவார். (உ)

# கூட்டுறவாளர் தினவிழா

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கூட்டுறவாளர் தினவிழா இம் மாதம் 22ம் திகதி விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

கூட்டுறவாளர் தினத்தையொட்டிமேற்படி சங்கக் கிளை நிலையங்கள் யாவற்றிலும் கூட்டுறவுக்கொடி ஏற்றப்பட்டு கூட்டுறவு சம்பந்தமான பேச்சு, கட்டுரை, இசை, நாடகப் போட்டிகளும் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தலைமையில் இவ்விழா நடைபெறும். (உ)

## நீதிக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கால்சட்டையும் அணிந்திருந்தார். 4 எதிரிகளும் விடுதலை பெற்று எதிரி கூண்டிலிருந்து செல்லும் போது முதலாம் எதிரி அவர்கள் பக்கம் திரும்பி சிரித்த முகத்துடன் வழியனுப்பினார்.

### பஸ்தியாம்பிள்ளையின்

# பொறுப்பிலிருந்த தஸ்தாவேஜுகள்

மரணமான இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையின் பொறுப்பிலிருந்த துரையப்பா கொலைதொடர்பான தஸ்தாவேஜுகளை நேற்று இரகசியப் பொலிஸ்பிரிவு பொலிஸ் அதிபர் திரு. சில்வா நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

வட்டு. தொகுதி பஸ்சேவை:

# தூதுகோஷ்டி எம்.பி.யை சந்தித்து முறையீடு

(பண்டத்தரிப்பு)

"பஸ் பிரயாணிகளுக்கு இ. போ. ச. திருப்திகரமாக சேவை செய்வதற்கு முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் தனியார் துறையினர் வான்கள் மூலம் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்படவேண்டும். இப்பகுதியில் இ. போ. ச. பஸ்களின் திருப்திகரமற்ற சேவையைப்பற்றி பாடசாலை மாணவ மாணவியர், அரசாங்க ஊழியர் உட்பட பொதுமக்கள் தெரிவித்துவரும் புகார்களை ஓரளவு நீக்குவதற்கு இதுவே சிறந்த வழியென எமது சங்கம் கருதுகின்றது."

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தின் தூதுகோஷ்டி வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவை சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்தையின்போது கோரிக்கை விடுத்தது. சித்தன்கேணியிலுள்ள எம். பி.யின் அலுவலகத்தில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் வட்டுக்கோட்டைத் தொகுதி பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் டாக்டர் பொ. மயூரநாதன், செயலாளர் திரு. இ. சங்கர், பொருளாளர் திரு. க. பரம்சோதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பஸ் சேவையை சீர் செய்வதற்கு காரைநகர் டிப்போ 782 இலக்க பஸ் பாதைக்கு 6 பஸ் வண்டிகளையும், 781 இலக்க பஸ் பாதைக்கு 4 பஸ்வண்டிகளையும், 786 இலக்க பஸ் பாதைக்கு 4 பஸ் வண்டிகளையும் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று சங்க பிரதிநிதிகள் குழுவினர் வட்டு. எம். பி. திரு. திருநாவுக்கரசுவிடம் தெரிவித்தனர். (உ)

# நூற்றுண்டு விழாப் போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் நூற்றுண்டுவிழாவையொட்டி நடைபெறும் பேச்சுப்போட்டி, திருமுறைப் போட்டி என்பன வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் எதிர்வரும் 16ம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [எ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Eelanaadu-Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka